Registered as a Newspaper

Ceygma Pumps
மண்ணெண்ணெயில் இயங்கும் இங்கிலிஷ் வில்லியர்ஸ் என்ஜின் பொருத்திய பம்புகளுக்கு
யுனைற்றெட் அக்றோ என்ஜினியரிங்
ஸ்ரான்லி வீதி, இராசாவின் தோட்டம் சந்தி, யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1-25

'சிக்மா பம்ஸ்'
மின்சாரத்தில் இயங்கும் மோட்டர்கள் எம்மிடம் கையிருப்பில் உண்டு
யுனைற்றெட் அக்றோ என்ஜினியரிங்
533, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஹு ஆடி மீ 27உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை 16 (12 – 08 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 221

# நோர்வே செஞ்சிலுவை நிவாரண உதவி வழங்கும்

## வடக்கில் பாதிக்கப்பட்ட இடங்களை பார்த்தபின் இணக்கம்

— அலுவலகச் செய்தியாளர்: கே. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், ஆக. 12

வடக்கில். இராணுவக் கெடுபிடிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நோர்வே செஞ்சிலுவைச்சங்கம் பெருமளவில் நிவாரண உதவிகளை வழங்கும்.

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச்சங்கத்தின் தலைவர் திரு. பந்துல அபயசேகர விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து, நோர்வே செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் நிவாரண உதவிகளை வழங்குவதற்கு இணங்கி உள்ளனர்.

வடக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி வழங்குவது சம்பந்தமாக ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவிதமான உதவிகள் தேவைப்படுகின்றன என்ற விவரத்தை யாழ் செஞ்சிலுவைச் சங்கம் தெரியப்படுத்தினால் அந்த உதவிகளை நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் வழங்கும் என்று நோர்வே செஞ்சிலுவைச் சங்கச் செயலாளர் நாயகம் திரு. ஓட்ருன் உதயனுக்குத் தெரிவித்தார்.

வடக்கில் ஏற்பட்ட அனர்த்தங்களையும், அழிவுகளையும் பார்ப்பதற்காக நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த நான்கு பிரதிநிதிகள் இங்கு வந்துள்ளனர்.

அவர்கள் கொழும்புச்

(4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

12 8-1987
புதன்கிழமை
சுபநேரம்:-
4.34 முதல் 6.04 வரை
ராகுகாலம்:-
12.04 முதல் 1.34 வரை
சங்கட ஹர கணபதி விரதம்

## முச்சந்தி முரளி



பிறிட்ஜைப் போலே இன்னும் எத்தினை சாமான்களை மீட்க வேண்டி இருக்குமோ... தாலிக்கொடியளும் கனக்கக் கிடக்கும் பாத்து எடுத்து உரியவையிட்டை கொடுத்தால் நல்லது...

## பொருள்களை மீட்கும் இந்திய வீரர்

யாழ்ப்பாணம், ஆக 12

பருத்தித்துறையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரிடம் இருந்த ஏழு குளிர்சாதனப் பெட்டிகளை இந்திய இராணுவத்தினர் பொறுப்பேற்றனர்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தென்னிலங்கை செல்லும்போது இந்தக் குளிர்சாதனப் பெட்டிகளைக் கொண்டு செல்ல முயற்சித்தனர். என்று கூறப்படுகிறது.

இதேவேளை ஸ்ரீலங்கா இராணுவத்திடம் இருந்த வல்வெட்டித்துறை அம்மன்கோயில் ஜெனரேட்டர் திருப்பி ஒப்படைக்கப்பட்டு விட்டது.

பெரும் தொகையான சைக்கிள்களும் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டு வருகின்றன. (இ-ஒ)

# ஆயுத ஒப்படைப்பு பற்றி ஈரோஸ் இன்று அறிவிக்கும்

## பாலகுமார் யாழ். வந்தார்

யாழ்ப்பாணம், ஆக. 12

ஈரோஸ் இயக்கம் ஆயுதங்களை ஒப்படைப்பது குறித்து இன்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

ஈரோஸ் இயக்க முக்கிய பேச்சாளரும், பிரமுகருமான திரு வேலுப்பிள்ளை பாலகுமார் இதனை அறிவிப்பார்.

திரு. பாலகுமார் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். அவருடன் மற்றொரு முக்கிய பிரமுகரான திரு. சங்கரும் வந்தார்.

அவர்களுடன் மற்றும் 29 ஈரோஸ் உறுப்பினர்களும் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

தாம்பரம் விமான நிலையத்தில் இருந்து நேற்றுக் காலை 8.30 மணி அளவில் விசேட விமானத்தில் புறப்பட்ட அவர்கள் காலை 9 45 மணியளவில் பலாலியை வந்தடைந்தனர். பலாலியில் இருந்து வாகனங்கள் மூலம் அவர்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

திரு. பாலகுமார் நேற்று யாழ்ப்பாணம் திரும்பியதையடுத்து ஆயுத ஒப்படைப்பு தொடர்பான முக்கிய முடிவுகள் இன்று வெளியிடப்படும் என அறியப்படுகிறது.

ஈரோஸ் பிரமுகர்கள் வருகையையடுத்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் வங்கிக்கிளை திறக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஆக. 12

தவிர்க்க முடியாத காரணங்களினால் சில மாதங்களாக மூடப்பட்டிருந்த இலங்கை வங்கி காங்கேசன்துறைக் கிளை இன்று புதன்கிழமை முதல் வாடிக்கையாளர்களுக்காக மீண்டும் திறக்கப்படும்.

இலங்கை வங்கி யாழ்ப்பாண மாவட்ட முகாமையாளர் இதனைத் தெரிவித்தார்.

எனினும் ஆரம்ப கட்டமாக சில தினங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட நேரங்களில் மாத்திரம் வங்கிச் சேவைகள் நடைபெறும் என்றும் அவர் கூறினர். (இ)

## இந்திய ராணுவ ஜீப் மீது கல் வீச்சு!

### துப்பாக்கி கீழே விழுந்தது

திருகோணமலை, ஆக 12

திருகோணமலை மத்திய மீன் சந்தைக்கு அருகால் சென்று கொண்டு இருந்த இந்திய இராணுவ ஜீப்பினுள் கல் வீசப்பட்டது.

இதனால் ஜீப்பில் இருந்த இந்திய வீரர் ஒருவரின் துப்பாக்கி கீழே விழுந்தது.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பகல் இடம் பெற்றது.

இது பற்றி இந்திய இராணுவ அதிகாரிகள் திருமலை இணைப்பதிகாரியின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதைத் தொடர்ந்து கடந்த திங்கட்கிழமை திருமலை மத்திய சந்தையில் இந்திய, இலங்கை இராணுவ அதிகாரிகள் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

கூட்டத்தில் பேசிய இந்திய இராணுவ அதிகாரி,-

''அமைதியைக் காக்கவே நாம் இங்கு வந்துள்ளோம் எமக்கு தமிழர், சிங்களவர் என்ற பேதம் கிடையாது. இப்பணிக்குத் தடையாக இருப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம். தடுப்பவர்களைக் கைது செய்து மேல் நடவடிக்கைக்காக பொலீஸிடம் ஒப்படைப்போம்''- என்று தெரிவித்தனர்.

இலங்கை இராணுவ அதிகாரி ஒருவர் பேசு

(4ஆம் பக்கம் பார்க்க)

# வெடி விபத்தில் 4 புலிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக 12

நேற்றுக் காலை சாவச்சேரிப்பகுதியில் ஏற்கனவே புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள், மற்றும் வெடிபொருள் சாதனங்களை அகற்றிச் சேகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுருந்த போது தற்செயலாக ஏற்பட்ட வெடிவிபததில் விடுதலைப்புலிகள் அமைப்பைச்சேர்ந்த நால்வர் வீரமரணமடைந்தனர்.

மேலும் இவ்விபத்தின்போது பெருமளவு ஆயுதங்களும், வெடிபொருட்களும் முற்றாக நாசமாகியுள்ளன.

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 2வது லெப்டினன்ட் பிரகலாதன் (சதீஸ் – உசன்) 2வது

(4 ஆம் பக்கம் பார்க்க)

18 ஆம் திகதி

# திருமலையில் சிங்கக் கொடி ஏற்ற சிங்கள முதலாளிமார் திட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 12

18ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் சமயம் திருமலை மாவட்டம் முழுவதும் சிங்கக் கொடியை ஏற்றுவதற்கு அப்பகுதி சிங்கள முதலாளிமார் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

போராளிகள் இயக்கம் ஒன்று இத்தகவலைத் தெரிவித்தது.

திருமலையில் கடந்த 2 ஆம் திகதி தரையிறங்கிய இந்திய இராணுவம் அங்கு பரவலாக பல முகாம்களை அமைத்திருந்தாலும் நேற்றுக்காலை வரை ஸ்ரீலங்கா இராணுவத்தின் முகாம்கள் எதுவும் வாபஸாகவில்லை.

மேலும் திருமலை மாவட்டத்தில் ஊர்காவலர் படையிடமிருந்து ஆயுதங்களை திருப்பிப் பெறும் வேலைகளிலும் இந்திய இராணுவம் இதுவரை ஈடுபடவில்லை.

திருமலை மாவட்டத்தில் ஊர்காவலர்களின் அத்துமீறல் சம்பவங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பலாலியிலிருந்து கோட்டைக்கு வந்த இராணுவக் "கூட்டம்"

யாழ்ப்பாணம், ஆக. 12

இந்தியத் துருப்புகள் சுமார் ஐம்பது ட்ரக் வண்டிகளில் கூட்டமாக பலாலியிலிருந்து நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

கோட்டை முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான புலடோஸர்களையும் இந்திய இராணுவத்தினர் கொண்டுவந்துள்ளனர்.

மூங்கில் தடிகளும், கூடாரங்களும் ட்ரக்குகளில் ஏற்றி வரப்பட்டன.

இந்த ட்ரக்குகளில் பல தற்போது கோட்டை முகாமிலும் மண்டைதீவு முகாமிலும் நிறுத்தப்பட்டுள்ளன.

பல கிராமங்களில் இராணுவ முகாம்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளையும் துருப்புகள் மேற்கொண்டுள்ளனர். (உ-10)

மண்டைதீவு மினி முகாம் பகுதியில் மட்டும்

# ஐநூறுக்கும் அதிகமான கண்ணிவெடிகள் மீட்பு

குருநகர், ஆக. 12

மண்டைதீவு 'மினி' முகாம் பிரதேசத்தினுள் இதுவரை ஐநூற்றுக்கும் மேற்பட்ட கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: இப்பகுதியில் சுமார் மூவாயிரம் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

எஞ்சியிருக்கும் கண்ணிவெடிகளை மீட்பதற்காகவே இராணுவம் இன்னமும் அங்கு நிலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய அமைதிப்படை தலையிட வேண்டும்

துன்புறுத்தல்களைத் தடுத்து நிறுத்த

## அன்ரன் பாலசிங்கம் கேட்கிறார்

சென்னை, ஆக. 12

இதர போராளிக் குழுக்கள் எமது தொண்டர்களைத் துன்புறுத்துகின்றனர். இதில் இந்திய அமைதிப்படை தலையிட வேண்டும்.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் செய்தியாளரிடம் சொன்னார்.

இந்திய – இலங்கை ஒப்பந்தம் வந்த பின்னர் அங்கும் இங்குமாக துன்புறுத்தல் சம்பவங்கள் இடம் பெற்றன.

இதைத் தவிர இலங்கை இராணுவம் வேறு வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடவில்லை.

கால வரம்புக்குள் ஆயுதங்களை ஒப்படைப்பதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை இந்திய-இலங்கை

(4ஆம் பக்கம் பார்க்க)

## இன்று முதல் மின் வெட்டு

யாழ்ப்பாணம். ஆக. 12

இலங்கை மின் சார சபையினர் யாழ்.மாவட்டத்தில் இன்று முதல் மறு அறிவித்தல் வரை மூன்றரை மணிநேர மின்வெட்டை அமுல் செய்கின்றனர்.

காலை 6–00 மணிமுதல் 9–30 மணிவரை இது அமுல் செய்யப்படும் என்று இலங்கை மின்சாரசபை யாழ்-பிரதேச சுன்னாகம் அலுவலக மின்பொறியியலாளர் தெரிவிக்கின்றனர். (அ-10)

LANKA CEMENT LTD.
லங்கா சிமெந்து நிறுவனம்
அறிவித்தல்

லங்கா சிமெந்து லிமிட்டெட் சகல ஊழியர்களுக்கும் துறைமுகப்பகுதி ஊழியர்களுக்கும்

மேற்படி தொழிற்சாலையும் துறைமுகப் பகுதியும் மீண்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட இருப்பதால் கடமையாற்றும் சகல ஊழியர்களும் இன்று 12-08-87 (புதன்கிழமை) மு. ப. 8-30 மணிக்கு சமுகம் கொடுக்குமாறு வேண்டுகிறோம்.

பிரதிப்பொதுமுகாமையாளர்
லங்கா சிமெந்து நிறுவனம்.
காங்கேசன்துறை.

# ஒப்பந்த விவகாரம் 18இல் சபைக்கு வராது

## லலித் தகவல்

கொழும்பு, ஆக 12.

இம்மாதம் 18 ஆம் திகதி கூடும் நாடாளுமன்றத்தில் வழமையான அலுவல்களே மேற்கொள்ளப்படும்.

அன்று இந்திய இலங்கை ஒப்பந்தம் தாக்கல் செய்யப்படமாட்டாது.

இப்படி தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

அத்திடியாவில் நடந்த பாடசாலைக் கட்டடத் திறப்பு விழாவில் பேசுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இன்னொரு நாட்டின் தலைவருடன் சர்வதேச ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட தற்போதைய அரசமைப்பு சட்டத்தின் கீழ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு உரிமையுண்டு.

இந்திய -இலங்கை ஒப்பந்தம் அவ்வகையானதுதான். ஆகவே அந்த ஒப்பந்தத்தை அங்கீகாரத்துக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியதில்லை.

இம்மாதம் 18 இல் கூடும் நாடாளுமன்றக் கூட்டத்தில் இந்த ஒப்பந்தம் சமர்ப்பிக்கப்படலாம் என்று சிலர் எண்ணுகின்றனர். அது நடைபெறுது. ஆனால் அன்று நாடாளுமன்றம் கூடும். வழமையான அலுவல்கள் அன்று இடம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

நெல்லியடித்தாக்குதலையடுத்து

# காணாமல்போன 12 பேரின் நிலை என்ன?

யாழ்ப்பாணம், ஆக. 12

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய முகாம் தாக்கப்பட்டதை அடுத்து இராணுவத்தினரால கைது செய்யப்பட்டவர்களில் 12 பேரின் நிலை பற்றி ஒன்றும் தெரியவில்லை.

காணாமல் போனவர்களின் பெற்றோர், மனைவிமார் இராணுவ முகாம்களில் விசாரித்தபோது சரியான தகவல் ஏதும் கிடைக்கவில்லையாம்,

இதனால் சம்பந்தப்பட்டவர்கள் பெரும் கவலை அடைந்துள்ளனர்.

இதேவேளை வல்வெட்டித்துறை பிரசைகள் குழுவின் முன்னாள் உறுப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ( சின்னஞ் சிறு விளம்பரம் )

## விற்பனைக்கு

மரியாயே வாழ்க எம்மிடம் திருவழிபாட்டுக்குத் தேவையான செபமாலைகள், செபப் புத்தகங்கள், மெழுகுதிரிகள், படங்கள், வரவணிசங்கள் முதலியனவும், பாதுகாவலன் இதழும், புதிய உலகம் சஞ்சிகையும், செபமாலை தியானம் மோட்சப் பாதை செபப்புத்தகங்களும் விற்பனைக்குண்டு. புனித சிந்தாத்திரை மாதா செபமாலை ஸ்ரோர்ஸ் 140, சுருவில் வீதி, கரம்பன், ஊர்காவற்றுறை. (1467)

மாணவர் விடுதலை நாட்களில் கணித பாடத்தை தாமாகவே மீட்க உதவும் நூல்கள் மயூரதி வெளியீடுகளாகும். ஆண்டு 8, ஆண்டு 10, ஆகியவற்றிற்கு கணிதம் பல்தேர்வு வினாக்கள் விற்பனையாகின்றன: பூபாலசிங்கம் புத்தகசாலை. (1455)

லக்ஷ்மி சிவசங்கரி, அனுராதா ரமணன், ரமணிசந்திரன், ராஜேஸ் குமார், கண்ணதாசன், அண்ணாதுரை, மற்றும் பலரின் எழுத்தோவியங்கள் மர்ம மாயாஜால சமூக கதைகள் வார மாத சஞ்சிகைகள், புத்தகங்களை பெற ராஜன் புத்தகசாலை 12, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். பழைய சஞ்சிகைகள் மலிவு விலைகளில் (சில வாரங்களுக்கு மட்டும்) கிடைக்கும். (1001)

நல்லூர் சுற்றுடலில் இரண்டு பரப்புக் காணியில் நவீன வசதியுடன் கூடிய புதிய பெரிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு:- நம் - 15 முருகேசன் ஒழுங்கை, நல்லூர். [1394]

Bairaha Farms Hisex பிரவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகளும் Hybro புரொயிலர் குஞ்சுகள் Hy line வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி கொக்குவில். (1469)

நல்ல நிறங்களில் லவ் பேட்ஸ் விற்பனைக்குண்டு 114, 3 ஆம் குறுக்குத் தெரு, மணிப்புரி, கொழும்புத்துறை. (1466)

சகல தளபாடங்களுடன் வீடு ஒன்று கரம்பொனில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி. வி. ரி. யோசப், முருகன் வீதி, கரம்பொன், ஊர்காவற்றுறை (1468)

## வகுப்புகள்

புதிய கல்வி நிலையம் கெங்காதரன் ஆஸ்பத்திரி, முன்பாக யாழ்ப்பாணம் ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரையுள்ள வகுப்புகளுக்குச் சகல பாடங்களும் திறமை மிக்க ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. ஆண்டு 6, புலமைப்பரிசில் பரீட்சைக்கு வினாத்தாள், மீட்டல் வகுப்புகளும் (புதிய பிரிவு) ஆண்டு 11 க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கேற்ப விசேடவகுப்புகளும் ஆரம்பமாயுள்ளது. கிளை:- புதிய கல்வி நிலையம், களபூமி, காரைநகர். (1462)

## கல்வி

சமூகக்கல்வி 1987 O/L பரீட்சைக்கான துரித மீட்டல் வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன, 20, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் 5 ஆவது புதிய பிரிவு ஆரம்பம் 12 ஆம் திகதி பிற்பகல் 4–30 மணி ஆசிரியர் யோசெவ்ஸ் (1388)

**Sun Star Engineering Centre, Radio, T. V, Typing, (இரு பாலாரும்) Welding, Wiring, Re-winding** ஆரம்பம்: 05-09-87 **Theory:- S.C. Emmanuel B. Sc. (Cey) Practical:- K. Sritharan** இரு சான்றிதழ்கள், சாப்பாட்டுடன் தங்குமிட வசதி உண்டு. தொடர்பு **Director M Ghanhash. Jegajothy Engineering Works, 41, Bazaar Lane, Jaffna.** (1460)

## சேவை

மூன்று மொழிகளில் றபர் சீல்கள், பிளாஸ்டிக் நேம் போட், றப்பர் பிளேட், விளம்பர போட் செய்துகொள்ள நாடுங்கள்: வீமா றபர் ஸ்ராம்ஸ், 104, ஆனைப்பந்தி சந்தி, யாழ் நகர், ஏஜென்சிகள் வேண்டப்படுகின்றனர். (1384)

தெளிவான ஞேனியோ பிரதிகள் தமிழ், ஆங்கில ரைப்பிங் வேலைகள் தரமான போட்டோஸ்ரட் பிரதிகளுக்கும் யாழ் நகரில் நம்பிக்கை பெற்ற நிறுவனம் கிளின் கட், இல 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [1459)

## தேவை

பாவனையில் இல்லாத ரீ. வி. வீடியோ டெக் மின்சார உபகரணங்கள் நியாயவிலைக்கு வாங்கப்படும். தொடர்பு:- 184A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [1392]

## மணப்பந்தல்

யாழ் இந்து வேளாள பிரசா உரிமை பெற்ற கனடா என்சினியருக்கு பெண் தேவை. யாழ் வேளாள றோமன் கத்தோலிக்க 25 வயது நிரம்பிய மணப்பெண்ணுக்கு என்சினியர் அல்லது டாக்டர் மணமகன் தேவை. நல்ல சீதனம் கண்டி றோட்டில் வீடு, வளவுடன் கொடுக்கப்படும். தொடர்பு: A B C D E விவாகப் பொருத்துனர் 91/16, இந்து மகளிர் லேன், கந்தர்மடம். (1466)

உயர் வேளாளகுல நட்சத்திரம் மூலம், கனடாவில் குடியுரிமை பெற்று தொழிற்சாலை ஒன்றில்தொழில்புரிபவருக்கு 27 வயதுக்குட்பட்ட படித்த அழகான செவ்வாய்க்குற்றமற்ற மணமகள் தேவை. பெண்ணை இந்தியாவுக்கு அனுப்பி கலியாணம் செய்ய விரும்புவோர் சாதகக்குறிப்புடன் டாக்டர் சின்னத்துரை புகையிரத வீதி ஏழாலை மேற்கு தொடர்பு கொள்ளவும் (1470)

## அறிவித்தல்

ஒரு வருடத்துக்கு மேலாக இயங்கி வரும் ஆரம்ப கல்வி அபிவிருத்தி நிறுவனமான அறிவகம் தனது 2 ஆவது பெயரில் ஏதாவது பத்திரிகையோ, விற்பனைப் பொருட்களோ வெளியிட வேண்டாமென பொதுமக்களை தயவாக அன்புடன் கேட்டுக் கொள்கின்றது. (1471)

கிழக்கிலிருந்து

# அதிரடிப் பொலிஸ் படை அகற்றப்பட வேண்டும்

## ஹர்கிர்சிங்கிடம் பிரசைகள் குழு கோரிக்கை

மட்டக்களப்பு, ஆக. 12 விசேஷ அதிரடிப் பொலிஸ் படையை கிழக்கு மாகாணத்தில் இருந்து முற்றாக வாபஸ் வாங்க வழி செய்யுங்கள்.

மட்டக்களப்பு பிரசைகள் குழு, இந்திய அமைதிப் படையின் மேஜர் ஜெனரல் ஹர்கிர்சிங்குக்கு முன்கண்ட வேண்டுகோளை விடுத்தது.

போராளிகள் ஒப்படைக்கும் ஆயுதங்கள் பற்றிய விஷயங்களைக் கவனிக்க மேஜர் ஜெனரல் ஹர்கிர்சிங் திங்களன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார்.

அப்போதே பிரசைகள் குழுத் தலைவர்கள் அவரைச் சந்தித்து இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

அதிரடிப் பொலீஸ் படையினர் இப்போது முகாம்களுக்குள் தான் இருக்கின்றார்கள் என்று தெரிவிக்கப்பட்ட போது பிரசைகள்குழுத் தலைவர்கள் இந்தியத் தளபதிக்குத் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தில் நாளாந்த வாழ்க்கை வழமையான நிலைக்கு வர வேண்டுமானால் அதிரடிப் பொலீஸ் படை முற்றாக அகற்றப்பட்டாக வேண்டும். முகாம்கள் அனைத்தும் மூடப்பட வேண்டும்.

இப்படிக் குழுத் தலைவர்கள் தெரிவித்தனர். (இ-எ)

### முல்லைத்தீவில்

முள்ளியவளை, ஆக. 12 முல்லைத்தீவு, தண்ணியூற்று, முள்ளியவளைப் பகுதிகளில் உள்ள வர்த்தக ஸ்தாபனங்களிலும் பாதைகளில் காணப்படும் வாகனங்களிலும் புலிக்கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன. (இ-93)

### பட்டமளிப்பு விழா

அம்பாறை, ஆக. 12 கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெற இருக்கின்றது. (இ-14)

கோட்டைக்குச் சமீபமாக உள்ள

# சென்பீட்டர்ஸ் ஆலயம் மீண்டும் திறக்கப்படுகிறது

## இன்று ஸ்தோத்திர ஆராதனை

யாழ்ப்பாணம், ஆக. 12 கோட்டை இராணுவ முகாமுக்கு வெகு சமீபமாக உள்ள ஆலயமான யாழ் சென் பீட்டர்ஸ் தேவாலயம் கடந்த ஒரு வருட காலத்துக்குப் பின்னர் மீண்டும் ஆராதனைக்காகத் திறக்கப்படுகிறது.

இன்று புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு இந்தத் தேவாலயத்தில் ஸ்தோத்திர ஆராதனை நடைபெறுகிறது

தேவாலயத்தின் சேகரக் குரு அருட் திரு. சே. பி. கோவிந்தராஜ் ஸ்தோத்திர ஆராதனையை நடத்திவைக்கிறார்.

சுமார் ஒரு வருட காலத்துக்கு முன்னர் ஷெல் தாக்குதல் காரணமாக இந்த தேவாலயம் சேதம் அடைந்தது.

இதன் பின்னர் யாழ் கிறைஸ்ட் தேவாலயத்திலும் கடைசியாக சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்திலும் சென் பீட்டர்ஸ் தேவாலய ஆராதனைகள் நடைபெற்று வந்தன.

எதிர்வரும் ஞாயிறு முதல் ஆராதனைகள் பழைய படி காலை 7 30 மணிக்கு சென் பீட்டர்ஸ் ஆலயத்தில் நடைபெறும்

இதற்கிடையில் இத் தேவாலயத்தின் சில உடைமைகளுக்கு விஷமிகள் சிலரால் ஏற்படுத்தப்பட்ட சேதங்கள் குறித்து தேவாலயத்தின் குருவானவர் வருத்தம் தெரிவித்துள்ளார். (இ)

# அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

ஆரம்பிக்கும்

## ✶ வெளிவாரி ✶ பட்டப்படிப்புக்கள்

● கல்வியாண்டு 88/89 ●

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களின் தேவை கருதி வெளிவாரி பட்டப் படிப்புக்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் செப்டம்பர் 7 ஆம் திகதி

**(07-09-87) ஆரம்பமாகின்றன**

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி அடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், திருவாக சேவை உத்தியோகத்தர்கள் பின்வரும் பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

✶ கலைமாணி (B.A)

✶ வர்த்தகமாணி (B Com.)

✶ விஞ்ஞானமாணி (B.Sc) (கணிதம்)

விண்ணப்பங்கள் ஓகஸ்ட் 30 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களையும் விபரத்திரட்டினையும் பெற "பதிவாளர்" "அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்" என்ற பெயருக்கு ரூபா 10 ற்கான காசுக் கட்டளையுடன் 9"X11" அளவுடைய சுய முகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையை அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை சனி, ஞாயிறு தினங்களில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

- பதிவாளர் -

**அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்**

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(மக்கள் வங்கிக்கருகாமையில்)

# நெல்லியடியிலிருந்து இந்தியத் துருப்புக்கள் வாபஸ்

பருத்தித்துறை, ஆக 12 நெல்லியடியில் இயங்கி வந்த இராணுவ முகாம் முற்றாக மூடப்பட்டுள்ளது.

கடந்த பத்து நாட்களுக்கு மேலாக நெல்லியடியில் நிலை கொண்டிருந்த இந்திய சமாதானப் படை அம் முகாமை மூடிவிட்டு பருத்தித்துறை இராணுவ முகாமுக்குச் சென்றுள்ளது.

நெல்லியடி அசம்பாவிதங்களைத் தொடர்ந்து பருத்தித்துறை யாழ்ப்பாணப் பிரதான வீதியில் அமைக்கப்பட்ட சகல வீதித் தடைகளையும் இந்திய சமாதானப் படை அகற்றியுள்ளது.

தற்போது நெல்லியடி மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பி வருகின்றனர். (இ-118)

### புலிக்கொடி

அம்பாறை மாவட்டத்தின் பல கிராமங்களிலும் புலிக்கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன. (இ-14)

### நூல் நிலையம்

நுணாவில் மேற்கு அறவழிச் சிறுவர் கழகத்தில் சிறுவர்களுக்கான நூல் நிலையம் ஒன்றை அறவழிப் போராட்டக் குழுவின் இயக்குநர் திரு. க. ஜீவகதாஸ் திறந்து வைத்தார். (இ-31)

## யாழ் பல.நோ. கூ. சங்கம்

# இந்திய நிவாரணப் பொருள் விநியோகம்

மேற்படி நிவாரணத்துக்கு வழங்க வேண்டிய பொருட்களில் சீனி, பால் மா, தீப்பெட்டி, தாவர எண்ணெய் போன்றவை சுன்னாகம் அரச களஞ்சியத்தில் இருப்பில் இல்லை என்ற காரணத்தால், மேற்படி பொருள் விநியோகம் பின்போடப்பட்டுள்ளது.

பொது மக்களுக்கு வழங்க வேண்டிய நிவாரணப் பொருட்கள் முழுமையாக எமக்குக் கிடைத்ததும் உடனடியாக விநியோகம் நடைபெறும் என்பதை பொது மக்களுக்கு யாழ் பல. நோ. கூ. சங்கப் பொது முகாமையாளர் அறியத்தருகின்றார்.

# ★ பிரயாண ஒழுங்குகள் ★

## குவைத் (Petroleum Refinery)

குவைத் நாட்டிற்கு பின்வரும் வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட இருப்பதால் தகுதியாயுள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

SUPERVISORY STAFF

| | | |
|---|---|---|
| 1. Welding Inspector (Exp. 10 Years) | 100 K. D. | with Lloyd's or Equal Cert, |
| 2. Piping Foreman (Exp. 10 Years) | 75 K. D. | |
| 3. Duct Foreman (Exp. 10 Years) | 75 K. D. | |
| 4. Engineers (a) Mechanical | 175 K. D. | (Exp. 10 Years) |
| 5. (b) Electrical (Industrial) | 175 K, D. | |

SKILLED LABOURER — 8 Years Exp.

| | | |
|---|---|---|
| 1. High Pressure Pipe Welders | 75 K. D. | (With Lloyd's or Equal Cert) |
| 2. Pipe Fabricator and Fitters | 65 K. D, | |
| 3. Duct Fitters | 65 K. D. | |
| 4, Duct Fabricators | 65 K. D. | |
| 5. Electrician (Industrial Wiring | 65 K. D. | |
| 6. Safety Officer and Nurse | 80 K. D, | |

Semi Skilled 3 K 4 Years Exp.

Pipe Fabricators and Fitters    Pipe Weldnrs 60 K. D

UNSKILLED LABOURER

1. For General Carring, Loading, Unloading of Heavy Equipments and Pipes Food Allowance 25 K. D. Each — Contract Period 3 Years

முக்கிய குறிப்பு!-

13 ஆம் திகதி காலை நேர்முகப்பரீட்சைக்காக புறப்பட இருப்பதால் உடன் தொடர்பு கொள்ளவும்.

✶ கடந்த 29-06-87, 09-07-87 திகதிகளில் எமது முகவர் நிலையத்தினூடாக குவைத் நாட்டிற்கு (AL TREAKIT TRADING-EST-HARBOUR-KUWAIT) பிரயாணம் செய்தவர்களின் பெயரும் முகவரியும் வருமாறு:

1. சின்னத்தம்பி சுந்தரம் - (FORKLIFT) நல்லுடை, புத்தூர் கிழக்கு, புத்தூர்.
2. செல்வன் சர்வானந்தராசா (LABOURER J 175052 நவாலி, மானிப்பாய்.
3. குமாரவேலு குமரகுருபரன் (LABOURER) H0171756 கந்தரோடை, சுன்னாகம்.
4. நாகர் கதிரவேலு விஜயரெத்தினம் (LABOURER) H0116246 நவாலி, மானிப்பாய்.
5. தம்பு தர்மராசா (LABOURER) G 0322804 இணுவில் மேற்கு, இணுவில்.
6. பொன்னையா பாலசுப்பிரமணியம் (LABOURER)G0221550 ஸ்ரேசன் வீதி, கோண்டாவில்.
7. சம்பந்தர் இராஜமூர்த்தி (LABOURER) H0174990 ஸ்ரேசன் வீதி, கோண்டாவில்
8. அப்பர் உமாபதிசிவம் (LABOURER) H 0334691 கச்சாய் வீதி கொடிகாமம்.
9. வேலுப்பிள்ளை சிறீஸ்கந்தராசா (LABOURER) H 0117574 தவசியா குளம், வவுனியா
10. வேலுப்பிள்ளை பொன்னுத்துரை இரவீந்திரன் (LABOURER) J0130721 இணுவில் கிழக்கு, இணுவில்.
11. சங்கரப்பிள்ளை ஸ்ரீ குகன் (SUPERVISOR) J 0150023 இடைக்காடு ம. ம. வித்தியாலயம், இடைக்காடு.

முக்கிய குறிப்பு—

Bess Engineering Corporation. (THAIVAN) KUWAIT நாட்டிற்கு Pass Port தந்தவர்களும் Free Selection முடிந்தவர்களும் உடனே சந்திக்கவும்

தலைமை அலுவலகம்: **Construction & Development Company Ltd.**

37, S. D. SE Jeyasinghe Mawatha, Nugegoda.

தொடர்பு: (குடாநாட்டின் ஏகப்பிரதிநிதி)

**V. P. பாலசுப்பிரமணியம் (V. P. Bala)**

c/o. N. V. பொன்னுத்துரை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

Licence No. 96

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

சிற்றின்ப எண்ணங்களை உண்டாக்கும் சந்தர்ப்பம் ஏதேனும் நேரிட்டால், உடனே உள்ளத்தை ஆண்டவன் பால் செலுத்து. இதைப் பழக்கப்படுத்திக் கொண்டால் எல்லா அபாயமும் தாண்டிப் போகலாம்.

— ராஜாஜி

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
12.8.1987 த.பெ.இல: – 23

# புனர் வாழ்வும் புனர் நிர்மாணமும்

இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானதைத் தொடர்ந்து வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஓரளவேனும் அமைதிச் சூழ்நிலை உருவாகத் தொடங்கி உள்ளது. மக்கள், யுத்த பீதியின்றி தமது நாளாந்த அலுவல்களைச் செய்வதைக் காண முடிகிறது.

கடந்த நான்கு வருடங்களாக இடம் பெற்ற யுத்தம் ஓய்ந்து விட்டது. கிழக்கில் சில சில இடங்களில், ஸ்ரீலங்கா அரச படைகள் அசம்பாவிதங்களைத் தோற்றுவித்துக் கொண்டிருந்த போதிலும், அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்ற உறுதி வழங்கப்பட்டிருக்கிறது.

மொத்தத்தில் தமிழ்ப் பகுதிகளில், மாமூல் வாழ்க்கை நிலை திருப்திப்படும் அளவுக்கு ஏற்பட்டு வருகிறது.

யுத்தம் முடிந்து அல்லது ஓய்ந்து, சமாதானம் உருவாகி அமைதி தோன்றிய பின்னர், உடனடியாகக் கவனிக்க வேண்டிய இரண்டு முக்கிய விடயங்கள் உள்ளன. ஒன்று பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய புனர்வாழ்வு. இரண்டாவது பாதிக்கப்பட்ட மண்ணின் புனருத்தாரணம்.

இந்த இரண்டும் வாயு வேகத்தில் நடந்தால்தான் நாடும், மக்களும் புதுப் பொலிவும், புது வாழ்வும் பெறலாம்.

எமது மக்களிற் பலர் யுத்தத்தின் விளைவுகளால் வாழ்க்கையின் ஓரத்துக்கே போகும் அளவுக்கு தரை சாய்ந்து விட்டார்கள். அவர்களை எழும்பச் செய்து, நடக்க வைத்து, வாழ்வளிக்க வேண்டிய அளவுக்கு புனர்வாழ்வு நடவடிக்கைகள் சக்தியுடனும், வேகத்துடனும் இடம்பெற வேண்டும்.

சாதாரண உதவிகளும், சிறுசிறு நிவாரண உதவிகளும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய பலனைத் தரா. தீர்க்கமான முறையில் திட்டமிடப்பட்ட, ஒழுங்கு அமைக்கப்பட்ட, சீரான புனர்வாழ்வுத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் கஷ்ட, நஷ்டமின்றி மறுவாழ்வு தொடங்க அந்தப் புனர்வாழ்வுத் திட்டங்கள் உதவ வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு— புனர்வாழ்வு— புதுவாழ்வு அளிக்க உலக நாடுகளில் உள்ள தொண்டர் ஸ்தாபனங்கள் முன்வரக் கூடும். அவற்றின் உதவியைப் பெற்று மாநில மட்டத்தில் புனர்வாழ்வுத் திட்டங்கள் அமுல் நடத்தப்படுவது அவசியம்.

போராளிகளுக்கும், போராளிகள் குடும்பங்களுக்கும் விசேஷ புனர்வாழ்வுத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டியதும் முக்கியமாகும். அவர்கள் செய்த தியாகத்துக்கு ஈடு செய்யும் விதத்தில் அந்தப் புனர்வாழ்வுத் திட்டங்கள் அமைய வேண்டும்.

அழிந்த நாட்டைப் புனருத்தாரணம் செய்வது, புனரமைப்பது அரசுக்கு உள்ள மிகப் பெரும் பொறுப்பாகும். கடந்த நான்கு வருடங்களில் தமிழ்ப் பிரதேசங்கள் உருமாற்றப்பட்டுள்ளன. நகரங்களோ, பாழடைந்த, தொல்பொருள் ஆராய்ச்சிக்குரிய இடங்களாக மாறும் அளவுக்கு நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. கிராமப் புறங்களின் வளமும் வனப்பும் சூறையாடப்பட்டு அவை பூவிழந்து, பொட்டிழந்து நிற்கின்றன. மொத்தத்தில் தமிழ் மண்ணின் எழிலும் வளமும் பறிபோய் விட்டன. அதுயுத்தத்தின் கறைபடிந்து களங்கமுற்றுக் கிடக்கிறது. கலை, பண்பாட்டுச் சின்னங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

இந்த அழிவுகளை ஏற்படுத்தி, கறை பூசியவர்கள் ஸ்ரீலங்கா அரச படையினரே. அரசாங்கமும் அதற்கு ஒத்தாசையே.

எனவே தமிழ் மண்ணுக்குப் புதுவாழ்வு அளித்து, புனருத்தாரணம் செய்து மீண்டும் எழிலும் பொலிவும் உண்டாக்கும் பொறுப்பு அரசினுடையதே.

தான் செய்த அழிவுக்கு நஷ்டஈடு வழங்கும் பொறுப்பை அரசு தட்டிக்கழிக்க முடியாது. நஷ்டஈடு வேறு, புனர்நிர்மாணம் வேறு. நஷ்டஈட்டை அரசாங்கம் கொடுத்தாக வேண்டும். புனர்நிர்மாணத்துக்கு வெளிநாட்டு உதவிபெறலாம்.

தமிழ்ப் பிரதேசத்தின் புனர்நிர்மாணம், எதிர்காலத்தையும் கருத்திற் கொண்டு திட்டமிடப்படவேண்டும். உடைந்தவைகள், அழிந்தவைகளை எழுந்தமானத்தில் திருத்திவிடுவதாக இருக்கக்கூடாது.

இன்னும் பல காலங்களுக்கு ஏற்படக்கூடிய தேவைகளைக் கருத்திற் கொண்டு, நவீன நாடு – நகரதிட்டக் கொள்கைகளை அடிப்படையாக வைத்தே புனருத்தாரண வேலைகள் செய்யப்படவேண்டும்.

யுத்தத்தால் அழிவுகள் ஏற்பட்டன என்று நினைப்பதற்கு இடம் வைக்காமல், அழிவுகளை மறந்துவிடும் அளவுக்கு புனர்நிர்மாணம் கனகச்சிதமாக இருக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குப் புதுவாழ்வும், புனர்வாழ்வும் அளிக்கவும், தமிழ் மண்ணுக்குப் புதுப்பொலிவு தரவும் அரசு இப்போதே தனது நடவடிக்கைகளை முடுக்கிவிட வேண்டும் அது அரசு செய்ய வேண்டிய பிராயச்சித்தப் பணி.

## 277 கோடி ரூபா கடன் தள்ளுபடி

சண்டிகார், ஆக 11

பொது மக்களிடம் இருந்து வரவேண்டிய 277 கோடி ரூபாவை ஹரியானா மாநில அரசு உத்தியோக பூர்வமாக தள்ளுபடி செய்து விட்டது.

இதற்கான உத்தரவை மாநில அரசு நேற்றுப் பிறப்பித்தது.

த்தள்ளுபடியினால் கடன்பெற்ற 48 லட்சம் பேர் பயனடைகின்றார்கள்.

பத்தாயிரம் ரூபாவுக்குக் குறைவாகக் கடன் பெற்றவர்களின் கடனே இப்படித் தள்ளுபடி செய்யப்பட்டது.

முதலமைச்சர் தேவிலால் தான் பதவிக்கு வந்தால் கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று வாக்குறுதி அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

# இந்திய மாநிலங்களில் பெரும் வெள்ள அபாயம்

புதுடில்லி, ஆக 11

வட கிழக்கு இந்திய மாநிலங்களில் வெள்ள அபாயம் இன்னும்மோசமடைந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது

பிரமபுத்திரா நதி பெருக்கெடுத்துள்ள தன் காரணமாக அஸ்ஸாம் மாநிலத்தின் புதிய பகுதிகள் வெள்ளத்துக்குள் சிக்கியதாகவும் அறிவிக்கப்பட்டு உள்ளது.

ரயில் பாதைகள் வெள்ளத்தில் அள்ளுண்டு போய்விட்டன. இதன் காரணமாக வெளிமாநிலங்களுடனான ரயில் சேவைகள் துண்டிக்கப்பட்டுவிட்டன.

மேற்கு வங்காளத்தில் வெள்ளத்தினால் 6 லட்சம் மக்கள் வரையில் பாதிக்கப்பட்டனர்.

பீஹார், சிக்கிம் மாநிலங்களில் 20 லட்சம் மக்கள் வரையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெருமழை தொடர்ந்து பெய்து வருவதனால்தான் வெள்ள அபாயம் அதிகரித்து வருகின்றது. (இ எ)

## ஒப்பந்தத்துக்கு பாராட்டு

புதுடில்லி, ஆக. 11

புதுடில்லியில் நடந்த அணிசேரா இயக்க நாடுகளின் சமாதானமா நாட்டில் இந்திய–இலங்கை ஒப்பந்தத்தைப் பாராட்டும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. (இ-எ)

## பரஸ்பரம் பார்வையிட ஒப்பந்தம்

ஜெனிவா, ஆக. 11

இரசாயன உற்பத்தித் தொழிற்சாலைகளை பரஸ்பரம் பார்வையிட அனுமதிப்பது என்று அமெரிக்காவும் சோவியத் யூனியனும் தங்களுக்குள் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டன.

இதன்படி அமெரிக்க அதிகாரிகள் குழு, எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்யும் என்று அறிவிக்கப்பட்டது. (இ-எ)

## பங்களாதேஷில் 5 மந்திரிகள் பதவி நீக்கம்

டாக்கா, ஆக. 11

பங்களாதேஷ் அமைச்சரவையில் பெரிய மாற்றங்களை ஜனாதிபதி முகமட் எர்ஷாட் செய்தார்.

உப பிரதமர் உட்பட ஐந்து அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்த ஜனாதிபதி புதிதாக நான்கு பேரை அமைச்சர்களாக்கினார்.

அரசமைப்பு ரீதியாக ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் முகமட் எர்ஷாட் செய்த இரண்டாவது பெரிய அமைச்சரவை மாற்றம் இதுவாகும். (இ எ)

## மக்காவில் 110 துருக்கியர் உயிரிழப்பு

அங்காரா, ஆக. 11

மக்காவில் உஷ்ணம் காரணமாக உயிரிழந்தவர்களின் துருக்கிப் பிரசைகளின் எண்ணிக்கை 110 ஆக அதிகரித்தது.

கடைசியாக 24 பேர் உயிரிழந்தனர் பகல் நேரத்தில் வீட்டினுள் இருக்க வேண்டும் என்ற எச்சரிக்கையைப் புறக்கணித்த காரணத்தினால் தான் இவர்கள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

# ஒப்பந்தத்தை முழுதாக அமுல் நடத்தினால் பிரபாவின் மனதை மாற்றலாம்

## தொண்டா நம்பிக்கை

இந்திய – இலங்கை ஒப்பந்தம் பற்றி அமைச்சர் தொண்டமான் 'சண்டே ஐலண்டு'க்கு அளித்த பேட்டியின் ஒருபகுதி இங்கு பிரசுரமாகின்றது.

**கேள்வி:** இந்திய இலங்கை ஒப்பந்தம் இலங்கையில் நிரந்தர அமைதியைக் கொண்டு வருமா?

**தொண்டமான்:** ஒப்பந்தத்தை உண்மையாகவும் உறுதியாகவும் அனைவரும் அமுல் நடத்தினால் இலங்கையில் நிரந்தர அமைதி வரும். ஒப்பந்தத்தில் உள்ள வாசகங்களை அமுல் நடத்தினால் மட்டும் போதாது; உணர்ந்து அர்த்தத்துடன் அமுல் நடத்துவதில் தான் வெற்றி தங்கி உள்ளது.

**கேள்வி:** ஒப்பந்தம் வெற்றி பெறாது என்று பிரபாகரன் நினைக்கின்றார். இது ஒரு இடைக்காலத் தீர்வு என்றும் ஈழம் கோரிக்கையை அடையத் தொடர்ந்து போராடப் போவதாகவும் பிரபாகரன் கூறியிருக்கின்றார்.

**தொண்டமான்:** இது அவரின் அபிப்பிராயம். ஒப்பந்தத்தை முழுமையாக அமுல் நடத்தினால் அவரின் மனதை மாற்ற முடியும்.

**கேள்வி:** ஒப்பந்தத்தை அமுல் நடத்தினால், பாரபட்சமாக நடத்தப்படுவதாக தமிழர்கள் தொடர்ந்து கூற முடியாது என்று நீங்கள் சொல்கின்றீர்களா?

**தொண்டா:** ஒப்பந்தத்தின் அர்த்தத்தைப் புரிந்து அமுல் நடத்தினால் அப்படித் தமிழர்களினால் கூறமுடியாது. மீண்டும் விட்ட தவறுகளைத் தொடர்ந்து விட்டால் பிரச்சினைகள் தொடரத்தான் செய்யும்.

**கேள்வி:** ஒப்பந்தம் குறித்து சிங்களவர்களில் பெரும்பான்மையோர் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர் என்று நீங்கள் கருதுகின்றீர்களா?

**தொண்டா:** அது பற்றி நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும். அமைதி திரும்பி விட்டால் நியாயபுத்தி படைத்த எவரும் மகிழ்ச்சி அடைவர்.

**கேள்வி:** ஒப்பந்தத்தில் கையெழுத்திட இந்தியா இலங்கைக்கு நிர்ப்பந்தம் கொடுத்தது என்று எண்ணப்படுகின்றது. நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்?

**தொண்டா:** நான் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தியாவிடம் சரணடைந்து இந்த ஒப்பந்தம் செய்யப்படவில்லை. ஒருவர் தனது கொள்கையை மாற்றுவதுதான் நடந்து உள்ளது 40 ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வந்த கொள்கையை அரசாங்கம் மாற்றி உள்ளது. இதனால் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். மாற்றத்தை அவர்கள் சீரணிப்பது கஷ்டம் தான்.

**கேள்வி:** ஒப்பந்தத்தில் ஜனாதிபதி கையொப்பமிட மறுத்திருந்தால் இந்தியா இலங்கையை ஆக்கிரமித்திருக்குமா?

**தொண்டா?** இலங்கையை இந்தியா எப்போதாவது ஆக்கிரமிக்கும் என்று நான் நினைக்கவில்லை. ஒப்பந்தம் ஏற்படாது இருந்தால் இந்தியாவின் உதவியுடன் தமிழர் 'ஈழம்' பெற்றிருப்பர்.

**கேள்வி:** ஒப்பந்தம் இரண்டு பிரிவாக உள்ளது. ஒப்பந்தத்துக்கும் அதன் இணைப்புக்கும் வித்தியாசம் உண்டா?

**தொண்டா:** முதல் பகுதி இலங்கையின் உள் விவகாரம் பற்றியது. தமிழருக்கு அளிக்கப்படும் பாதுகாப்புப் பற்றி அது கூறுகின்றது. இணைப்புக்கள் இப்பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றன.

**கேள்வி:** எமது நாட்டில் நடக்கும் விஷயம் பற்றி இலங்கையுடன் ஏன் இந்தியா ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும்? இலங்கையில் வெளியார் சம்பந்தப்படுவதை இது காட்டவில்லையா?

**தொண்டா:** எமது பிராந்தியத்தில் இந்தியா உண்டு இப்பிராந்தியத்தின் பாதுகாப்பு இந்தியா, இலங்கை மற்றும் பிராந்தியத்தின் ஏனைய நாடுகளின் கவனத்தையும் ஈர்க்கின்றது.

இப்பிராந்தியத்தில் இல்லாத வல்லரசு ஒன்று எமது நாட்டில் தலையிடுவதுடன், இந்திய சம்பந்தத்தை சமமாகப் பார்க்க முடியாது.

இந்தியாவை விடுத்து வேறு வெளியார் சக்திகள் எமது நாட்டில் சம்பந்தப்படுவதை விரும்புபவர்கள் சிலர் இருக்கலாம்.

**கேள்வி:** உங்கள் அமைச்சர் சகாவான காமினி திஸநாயக்காதான் வடக்கு – கிழக்குடன் கூடிய இத் தீர்வைக் கொண்டு வர பெரும் உதவியாக இருந்தார் என்று பரவலாக நம்பப்படுகின்றது. அவருடன் வேறுயாரும் இந்தப் பெருமையைப் பெறுகின்றனரா?

**தொண்டா:** அமைச்சர் திஸநாயக்கா இது விஷயத்தில் ஆக்கபூர்வமான பங்கை ஆற்றினர் என்பது நிச்சயமான உண்மை. நாடு எதிர்நோக்கியுள்ள அபாயத்தை உணர்ந்து அவர் செயற்பட்டார்.

**கேள்வி;** ஒப்பந்தத்துடனான இணைப்புக்களுக்குச் சட்டவலு உண்டா?

**தொண்டா:** இரண்டு நாடுகள் செய்து கொண்ட ஒப்பந்தம் இது சட்டவலு என்ற பிரச்சினை எழாது. தார்மீக ரீதியான கடப்பாடு தான் உண்டு ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்ட பின்னர் அதற்குச் சட்டவலு கிடை

(4ஆம் பக்கம் பார்க்க)

### பிரதி அமைச்சர் மஜீத் கூறுகிறார்:

# வடக்கு- கிழக்கு இணைப்பு முஸ்லிம்களை பாதிக்காது

## தனி மாகாணசபை சாத்தியமற்றது

அம்பாறை, ஆக.11

வடக்கு-கிழக்கு மாகாணங்களை ஒரே மாகாண சபைக்குள் இணைக்கும் திட்டம் முஸ்லிம்களுக்கு ஒருபோதும் பாதிப்பாக அமையாது. கிழக்கில் முஸ்லிம்கள் மாகாண சபை அமைப்பது சாத்தியமற்ற ஓர்கோரிக்கை ஆகும்.

பிரதித்தபால், தந்தித் தொடர்புகள் அமைச்சரும் கிழக்கிலங்கையின் சிரேஷ்ட முஸ்லிம் அரசியல் வாதியுமான ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீத் மேற்கண்டவாறு கூறினார்.

சம்மாந்துறை ஜே. புளக் பகுதயில் அல்–ஹாஜ் எம். ஏ. மேசா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதி அமைச்சர் ஜனாப். அப்துல் மஜீத் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

வடக்கு-கிழக்கு மாகாணங்களை ஒரே மாகாண சபைக்குள் இணைக்கும் திட்டத்துக்கு நாம் ஆதரவு காட்டிவிட்டதாக எம்மவர்கள் சிலர் வசைமாரி பொழியத் தொடங்கியுள்ளனர்.

எனது அரசியல் வாழ்வில் எப்பொழுதும் இன ஒற்றுமைக்காகப் பாடுபட்டு வருகின்றேன்.

அந்தவகையில் இந்த நாட்டைக் குட்டிச் சுவராக்கிக் கொண்டிருக்கும் பிரச்சினை தீரவேண்டும், சமாதானம் ஏற்பட்டு நாடும் நாமும் வளம் பெற வேண்டுமென நாம் விரும்புகின்றோம்.

வடக்கு-கிழக்கு இணைப்பில் முஸ்லிம் மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது, நாம் மிகவும் சந்தோஷமாக வாழலாம் என்ற முழு நம்பிக்கை எனக்குண்டு.

வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணசபை அமைப்பின்கீழ் முஸ்லிம்களின் தனித்துவம் நிச்சயம் பாதுகாக்கப்படும். இதனை நாம் பேச்சுவார்த்தைகளின் போது உறுதிப்படுத்துவோம்.

இந்த அமைப்பில் நிச்சயம் நாம் தமிழ் மக்களுடன் ஒற்றுமையாக வாழலாம்.

அதைவிட்டு முஸ்லிம் மாகாணசபை ஒன்றை அமைப்பதென்பது சாத்தியமற்ற கூற்றாகும்.

இப்படி அவர் கூறினர். (இ-14)

## வீடியோ படம்

யாழ்ப்பாணம், ஆக12

யாழ்நகரில் இந்தியத் துருப்புக்கள் பொது மக்களுடன் கலந்துரையாடுவதுடன் வீடியோப் படங்களையும் எடுத்து வருகின்றார்கள். (இ-160)



## பொய்யாமொழி

**குறள்:**
பெருங்கொடையான் பேணன் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத்து இல்.

**பொருள்:**
பெரிய கொடையாளியாகவும் சினமற்றவனாகவும் ஒருவன் இருந்தால், அவனைப் போலச் சுற்றத்தை உடையவர் உலகத்தில் யாரும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

### வேலன் தொல்லைகளின் காலன்

நல்லையிலே வீற்றிருக்கும் வேலன் – எங்கள்
தொல்லைகளுக் கோர் அவனோர் காலன்
எல்லையிலே அவன்கருணைக் குன்று – தினம்
நல்லையினை நாடிடுதல் நன்று.

★ ★ ★

ஞாலம் திரண்டதெனக் கூட்டம் - நல்லைக்
கோலம் எங்களுக்கோர் தேட்டம்
ஆலம் அமுதெனவே உண்டான் – அவன்
பாலன் இவனைக்குரு என்றான்.

★ ★ ★

சேவற் கொடியுடைய வேலன் – வள்ளி
சிந்தை கவர்ந்தமணாளன்
காவல் புரியும்கையின வேலும் – நல்ல
ஞானத்தின் கூர்மையினைப் போலும்.

— ரகுபரன்

# நல்லை ஆதீனத்தின் பீடாரோஹண விழா ஞாயிறு நடைபெறும்

யாழ்ப்பாணம், ஆக. 12

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன 21 ஆவது ஆண்டு பீடாரோஹண விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (16–8–87) நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்குப் பூசையாகி வீதி பஜனை புறப்படும். 8 மணியளவில் ஸ்நபனாபிஷேகமாகி அதன் பின்பு பீடாபிஷேகம் இடம்பெறும் அதைத் தொடர்ந்து உற்சவமும் வேதபாராயணம், திருமுறைப் பாராயணம், நாத பாராயணம், தசதரிசனம் கோபூஜை என்பன நிகழும்.

காலை 11-30 மணிக்கு கொலு பூஜை. அதையடுத்து சிவநாயகி தியாகராஜா எழுதிய தில்லைக் கூத்தன் பக்திப்பாமாலை' என்னும் நூலை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வெளியிட்டு உரை நிகழ்த்துவார்.

கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் அறிமுக உரை நிகழ்த்துவார். பகல் 12 மணிக்கு அன்னதானம் நடைபெறும்.

மாலை 6 மணியளவில் செல்வி தனலக்ஷ்மி இராமச்சந்திராவின் இலனிசைக் கச்சேரியும் நடைபெறும். (அ)

## அகதிகள் திரும்புகின்றனர்

முள்ளியவளை, ஆக. 12

வடமராட்சியில் நிலைமை சீரடைந்து வருவதால் முல்லைத்தீவுக்கு வந்து தங்கியிருந்த அகதிகள் பலர் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். (இ-93)

## ஹர்த்தால் ஞாபகார்த்த கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 12

1953 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி நடைபெற்ற மாபெரும் ஹர்த்தால் ஞாபகார்த்தப் பொதுக் கூட்டம் இன்று புதன் பிற்பகல் 4 மணிக்கு கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்டப் பணிமனையில் நடைபெறும்.

கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்டச் செயலாளர் திரு. எஸ் விஜயானந்தன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் திருவாளர்கள் அ. வயித்திலிங்கம், டொமினிக் ஜீவா, வே. சிவராசா, க. நவரத்தினம், க. திருநாவுக்கரசு ஆகியோர் கருத்துரை வழங்குவர். (இ)

## இன்றைய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஆக. 12

யாழ். பல்கலைக்கழகம் கைலாசபதி கலையரங்கில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு யாழ்ப்பாண மாநகர அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு நடைபெறும்.

யாழ்ப்பாண மாநகர அபிவிருத்திக்குரிய திறமுறைகள் பற்றிப் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும்—

யாழ்ப்பாண மாநகரத்தின் நிர்வாகமும் அபிவிருத்தியும் அவற்றின் பிரச்சினைகளும் பற்றி யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு சி. வி. கே சிவஞானம் உரை நிகழ்த்துவார்கள். (இ)

## கம்பங்களில் ஏறும் இந்திய வீரர்கள்

கொக்குவில், ஆக. 12

இந்திய இராணுவத்தினர் யாழ் நகரப் பகுதிகளில் கம்பங்களில் ஏறி தொலைபேசி இணைப்பு வசதிகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-69)

## ரயிலுக்கு ஹெலி பாதுகாப்பு

முள்ளியவளை, ஆக. 12

கிளிநொச்சி வரை வந்த யாழ்தேவிக்குப் பாதுகாப்பாக இந்திய ஹெலி ஒன்றும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டது. (இ-93)

★ வர்ண நிழற்பட பிரதி ஒன்று 5/-மட்டுமே
★ தொழில் (Processing) செய்தல் இலவசம்
★ விற்பனை - வர்ண நிழற்பட சுருள்கள்
KODAK - FUJI - KONICA
TUDOR - FORTE
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்,
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உதயன்

12 08 1987 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதிகள்
★ சம்பியூட்டர் முறையில்
★ குறைந்த செலவில்
★ சிறந்த சேவையில்
பெற்றுக் கொள்ளலாம்.

## மஹோற்சவம்

சுன்னுகம் மயிலணி கந்த சுவாமிகோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 15-8-87 இல் ஆரம்பமாகும்,

* 15-8-87 சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு கொடியேற்றம்.
* 25-8-87 செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு சண்முகப்பெருமான் தேரில் ஆரோகணித்தல்.
* 26-8-87 புதன்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்த உற்சவம்.

அன்று இரவு 7 மணியளவில் கொடியிறக்க வைபவத்துடன் உற்சவம் நிறைவுபெறும்.

— தர்மகர்த்தா சபை

# புலிக்கொடி ஏற்றப்பட
## திருமலையில்பதற்றம் ஆரம்பமானது
## இந்திய துருப்புகள் ரோந்து

திருகோணமலை, ஆக. 12

இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானதைத் தொடர்ந்து திருகோணமலை நகரில் புலிக்கொடி ஏற்பட்டது

அதைத் தொடர்ந்து நகரில் ஏற்பட்ட பதற்றத்தைத் தணிக்க இந்திய இராணுவம் ரோந்து நடவடிக்கையை ஆரம்பித்தது.

இம் மாதம் 6,7,8 ஆம் திகதிகள் திருமலை நகரில் நடைபெற்ற சம்பவங்களை நமது திருமலைமாவட்டச் செய்தியாளர் இங்கு தொகுத்துத் தருகின்றார்.

**6 ஆம் திகதி காலை**

காலை 8.30மணி இருக்கும். பத்தாம் குறிச்சியில் இருந்து வந்த கூட்டம் ஒன்று மத்திய வீதி-கடற்காட்சி வீதிச் சந்தியில் உள்ள மின்கம்பம் ஒன்றில் புலிக்கொடியை ஏற்றியது.

இந்தக் கூட்டம் அதன் பின்னர் திரும்பிச் சென்று கொண்டிருந்தது.

அப்போது எதிர்ப்பக்கத்தில் இருந்து வந்த சிங்களவர்களின் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இக் கூட்டம் இலக்கானது

அப்போது 38 வயதான ஆறுமுகநாதன் என்பவர் அந்த இடத்திலேயே மரணமானார் இரண்டு குழந்தைகள் உட்பட எட்டுப்பேர் காயமடைந்தனர். அவர்கள் திருமலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதன் பின்னர் மத்திய வீதி ஊடாக மடத்தடி சென்ற கோஷ்டி ஒன்று தமிழருக்கு எதிரான கோஷங்களை எழுப்பிய வண்ணம் சென்றது.

**6 ஆம் திகதி மாலை**

நகரில் பல இடங்களில் புலிக்கொடிகள் கட்டப்பட்டன.

சிவன்கோவிலுக்கு அருகில் உள்ள தந்தை செல்வா சிலை உள்ள நினைவுத்தூபியின்மேலும் புலிக் கொடி ஒன்று ஏற்பட்டது.

பெருந்திரளாகத்தமிழ் மக்கள் குழுமி நின்று கற்பூரம் கொளுத்தி கரகோஷம் செய்தனர்.

'பிரபாகரன் வாழ்க' என்ற கோஷங்களும் எழுப்பப்பட்டன.

கடற்காசி வீதி, திருஞானசம்பந்தர் வீதி, சிவன்வீதி ஆகிய இடங்களில் புலிக்கொடி பறக்க விடப்பட்டிருந்தது

**7 ஆம் திகதி**

உயிரிழந்த ஆறுமுகநாதனின் சடலம் உறவினர்களிடம் காலை கையளிக்கப்பட்டது. மரணச் சடங்குகள் பிற்பகல் 3 மணியளவில் நடைபெறவிருந்தன.

ஆனுல் மூன்று மணியளவில் இந்திய இராணுவ அதிகாரிகள் இறந்தவரின் வீட்டுக்குச் சென்றனர்.

விசாரணைகள் நடத்த வேண்டும் என்று கூறி சடலத்தை திருமலை மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றனர்

மாலையே சடலம் உறவினர்களிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக முழு அளவிலான விசாரணையை இந்திய இராணுவ அதிகாரிகள் மேற்கொண்டனர்.

சம்பவம் தொடர்பான சாட்சிகள் திருமலை அர்ச். சூசையப்பர் பாடசாலைக்கு அழைக்கப்பட்டனர். அவர்களின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

பின்னர் குள்ளவாடியைச் சேர்ந்த இரண்டு சிங்களவர்கள் கைது செய்யப்பட்டனர் பின்னர் நகரில் இந்திய இராணுவத்தினரின் நடமாட்டம் ஆரம்பமானது

மாலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

**8 ஆம் திகதி**

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை ஆட்சேபித்து திருமலை நகரில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழர்களின் கடைகள் யாவும் பூட்டப்பட்டன; கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டன. வீடுகளிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டன. ஆங்காங்கே புலிக்கொடிகளும் காணப்பட்டன.

இலங்கைப் பொலீஸார் வாகனங்களில் வந்து புலிக்கொடிகளை அகற்றிச் சென்றனர். மீண்டும் புலிக்கொடிகள் ஏற்றப்பட்டன.

வீதிகளில் கூட்டம் கூட்டமாக நின்ற தமிழ் மக்களை இலங்கைப் பொலீஸார் தடியடிப் பிரயோகம் செய்து கலைத்தனர்.

நண்பகலில் இருந்து இந்திய இராணுவம் நகரில் ரோந்து நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

ஒவ்வொரு வீதியாக வாகனங்களில் ரோந்து நடவடிக்கையை இந்திய இராணுவம் ஆரம்பித்தது இலங்கை இராணுவத்தினர் ரோந்து திரியவில்லை (இ-எ-150)

## வெடி..
(1- பக்கத் தொடர்ச்சி)

லெப்டினன்ட் சிவசிறி (அப்பன் - இத்தாவில்) தயா (கருணு - எழுதுமட்டுவாள்) நேசன் (கமல் - மீசாலை) ஆகியோரே வீர மரணமடைந்தனர்.

## ஐநூறு---
(1-ம பக்கத்தொடர்ச்சி)

கொண்டிருப்பதாக அவர் சொன்னர்.

கண்ணிவெடிகளை மீட்கும் பணியில் ஈடுபட்ட ஸ்ரீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த லெப்டினன்ட் ஒருவர் பலியானதுடன் மூவர் காயங்களுக்கு இலக்கானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-51)

## ஒப்பந்தத்---
(3-ம் பக்கத்தொடர்ச்சி)

யாது என்று ஒரு நாடு சொல்லமுடியாத ஒப்பந்தம் செய்தாயிற்று. அதை அமுல் நடத்தக் கூடிய நேர்மை, துணிவு எமக்கு ஏற்படவேண்டும்.

கேள்வி: இரண்டு அரசாங்கங்களும் செய்து கொண்ட ஒப்பந்தம் இது. அடுத்து பதவிக்கு வரும் அரசாங்கங்களை இது சட்டுப்படுத்துமா?

தொண்டா: அடுத்து பதவிக்கு வரும் அரசாங்கங்கள் ஒப்பந்தத்தைத் தூக்கி எறியலாம். ஒப்பந்தத்தின் மற்றப் பங்காளி இதற்குச் சம்மதிக்கவேண்டுமே. ஒப்பந்தத்தைக் கொரவிக்கமாட்டோம் என்று பொறுப்பற்றவர்கள் தான் கூறுவர். அப்படிச் சொல்லும் துணிச்சல் அவர்களுக்கு வராது. பதவிக்கு வரும் புதிய அரசாங்கம் அதை ஒத்தி வைக்கலாம். நடைமுறையில் உறைநிலையில் நிறுத்தி வைக்கவும் முடியும்
(வளரும்)

## ஒப்பந்த விவகாரம். . .
(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பெறும்.

முன்னர் நடந்த பேச்சுக்களில் பூர்த்தியாக்கப்படாத எஞ்சியுள்ள விஷயங்களை ஒப்பந்தம் கைச்சாத்தான தினத்தில் இருந்து வரும் ஆறு வாரங்களுக்கு இடையில் இரு நாடுகளும் பேசித் தீர்க்க வேண்டும். - இப்படி ஒப்பந்தம் கூறுகின்றது.

அது நடந்த பின்னர் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். ஒப்பந்தத்தில் கூறப்பட்ட மாகாண சபைகளை அமைக்கும் சட்ட மூலமும் அது.

- இப்படி அமைச்சர் சொன்னர். (எ)

## இந்திய ..
(1ம் - பக்கத் தொடற்சி)

அரசுகள் புரிந்து கொண்டிருப்பர்.

மக்களுக்கு தக்க பாதுகாப்பு ஏற்பாட்டு வசதிகளைச் செய்து கொடுத்தபடியே ஆயுத ஒப்படைப்புக்கு வழி வகுக்க வேண்டும்.

விசாரணைக்காகத்தான் 13 ஈ.பி ஆர் எல். எவ். போராளிகளைக் கைது செய்ததே ஒழிய துன்புறுத்துவதற்காக அல்ல.

இப்படி அன்ரன் பாலசிங்கம் சொன்னர்.

## ஆயுத----
(1ம் - பக்கத் தொடற்சி)

ஏனைய இயக்கப் போராளிகளும், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களும் அடுத்த வாரம் அளவில் யாழ்ப்பாணம் வந்து சேர்வார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது, (அ-10)

## திருமலை----
(1-ம்பக்கத் தொடர்ச்சி)

களும் தொடர்ந்து வருகின்றன.

அடிக்கடி தமிழ் மக்களை ஆங்காங்கே பிடித்து துன்புறுத்தும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுக்காலை 9 மணிக்கு ஸ்ரீலங்கா இராணுவம் நிலாவெளி முகாமிலிருந்து வெளியேறி தமிழ் மக்களுக்கு எதிரான- காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

- இப்படி அந்தப் போராளி இயக்கம் தெரிவித்தது. (உ)

## நோர்வே - - - -
(1-ம்பக்கத் தொடர்ச்சி)

செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. பந்துல அபயசேகராவுடன், வடமராட்சி உட்பட, பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சென்று பார்வையிட்டனர்.

அதன் பின்னரே நிவாரண உதவி வழங்குவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்தாயது. (அ-10)

## காணுமற்- --
(1ம் - பக்கத் தொடற்சி)

பினர் ஒருவர் தகவல் தருகையில்—

சில இடங்களில் சடலங்களை எரித்தஅடையாளங்களைத் தாம் கண்டதாகவும்—

மேற்படி இடங்களில் காணுமல் போனதாகக் கூறப்படும் சிலரின் மூக்குக் கண்ணுடி, அடையாளக் கார்ட் முதலியன அரைகுறையாக எரிந்த நிலையில் காணப்பட்டதாகவும் கூறினர். (உ-ஓ)

## இந்திய இராணுவ·
(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கையில்,-

தமிழர்களுடன் சமாதானமாக வாழ வேண்டும். தமிழர்களுடன் சமாதானமாக வாழ வேண்டும் என்பதற்காகவே அரசாங்கம் இந்தியாவுடன் இந்த ஒப்பந்தத்தைச் செய்துள்ளது. இலங்கை அரசே தமிழருக்கு எல்லா உரிமைகளையும் வழங்கியுள்ளது. தொடர்ந்து பகைமை பாராட்டுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்''- என்று தெரிவித்தார். (இ-எ)

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் வேண்டுகோள்

ஏற்பட்டுள்ள இழப்புக்கள் சேதங்கள் பற்றிய பூரணமான தகவல்களைத் தாமதமின்றித் திரட்டும் நோக்கத்திற்காகவும், உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரண வேலைகளை மேற்கொள்ளுவதற்காகவும் அவற்றுக்கான உதவித் தொகைகளைப் பெறுவதற்காகவும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் செயல்திட்டம் ஒன்றினை உருவாக்க எண்ணியுள்ளது. இதற்கு பாதிக்கப்பட்டவர்களும், பாதிக்கப்பட்டவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஸ்தாபனங்களும் அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள பொது தாபனங்களும் எமக்கு உதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

இன்றைய கட்டத்தில் இத்தகவல்களை ஒருங்கு திரட்டி எமது இழப்புக்கள், சேதங்களின் உண்மையான அளவினை மதிப்பிட்டுக்கொள்வது மிக முக்கியமான கடமையாகும். எனவே, இப்பணியில் எமக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இது பற்றிப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் பிரசைகள் குழுக்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் கூட்டம் 15-8-87 காலை 10-00 மணிக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவன அலுவலகத்தில் (91, செட்டித்தெரு, நல்லூர்) நடைபெறுமென்பதை நினைவூட்டுகின்றோம்.

நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு
★★ உதயன் நடத்தும் ★★
## அதிர்ஷ்டப் பயணப் போட்டி-87


★ யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரைசொகுசுபஸ் பயணம்
★ கொழும்பு கிறீன்லன்ட்ஸ் ஹோட்டலில் ஒருநாள் ஓய்வு
★ எயர் லங்கா விமானத்தில் இருவருக்கு பழநி போய் - வரும் பயணச்சீட்டு
★ பழநியில் உயர்தர ஹோட்டலில் தங்கும் வசதி
★ பழநி முருகனை 3 நாட்கள் தங்கி வணங்கும் பாக்கியம்.
★ கைச்செலவுக்கு 50 அமெரிக்க டொலர்கள்.
● 2 ஆம் 3 ஆம் பரிசுகளாக தங்க மோதிரமும், காஞ்சிபுரம் பட்டுச்சேலையும்.

## இவற்றைப் பெறப்போகும் அதிர்ஷ்டசாலிகள் யார்?

அந்த அதிர்ஷ்டசாலி நீங்களாகவே இருக்கச் செய்யவேண்டியது இவ்வளவு தான்.

1. உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளில் நாளாந்தம் பிரசுரமாகும் 'அதிர்ஷ்டப் பயணப் போட்டி கூப்பன்களை கத்தரித்து எடுக்க வேண்டும்.
2. கூப்பன்களில் உள்ள கேள்விகளுக்குப் பொருத்தமான விடைகளை அதற்கு என ஒதுக்கப்பட்ட இடைவெளிகளில் எழுத வேண்டும்
3 உங்கள் பெயர் முகவரிகளை தருந்த இடங்களில் நிரப்பிக் கூப்பனை நல்லூர் ஆலய வீதிகளில் ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் இடவேண்டும். அல்லது தபால் மூலம். 'அதிர்ஷ்டப் பயணப் போட்டி 87'' உதயன் பணிமனை, 292/2. நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு
உதயன் நடத்தும்
அதிர்ஷ்டப் பயணப் போட்டி



பெயர் ____________________
முகவரி ____________________

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் மணிக்கோபுரங்கள் எத்தனை?

உதயன் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

நல்லூரை வழிபட்ட இரு ஈழத்துச் சித்தர்கள் யாவர்?

சஞ்சீவி வார இதழின் இலட்சிய வாசகம் என்ன?

● உதயன் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்கள் குடும்பத்தினரும் இந்தப் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

விளம்பர இல. 8.

## யாழ். மாவட்ட புனர்வாழ்வுக்கான திட்டம்
### (1-10-86 தொடக்கம் 10-08-87 வரை பாதிக்கப்பட்டவர்கள்)

புனர்வாழ்வு அமைச்சு புனர்வாழ்வுக்கான பின்வரும் விடயங்களை உள்ளடக்கிய திட்டமொன்றினை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

1. வர்த்தக, குடியிருப்பு இடங்களுக்கான புனரமைப்பு.
2. அசைவுள்ள சொத்துகளுக்கான புனரமைப்பு.
3. பொருளாதார புனர்வாழ்வுக்கான உதவிகள்.
4. கூடுதலாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான உதவிகள்.
5. ஊனமுற்ற அல்லது காயமடைந்தவர்களுக்கான உதவி.
6. பாதிக்கப்பட்ட சிறுர்களுக்கான உதவி.
7. பாதிக்கப்பட்ட வழிபாட்டுத்தலங்களுக்கான புனரமைப்பு.
8. இழந்த அல்லது சேதமடைந்த வாகனங்களுக்கான உதவி.
9. கால்நடைகளின் இழப்புக்கான உதவி.
10. மீனவர்களின் உடைமைகளின் இழப்பிற்கான உதவி.

அளிக்கப்பட வேண்டிய விபரங்களடங்கிய விண்ணப்பப் படிவங்களை உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் 19 - 08 - 1987 ஆம் திகதி தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

01 - 10 - 1986 தொடக்கம் 10 - 08 - 1987 வரையிலான காலப் பகுதியில் பாதிப்படைந்த சகல நிறுவனங்களும் தனிப்பட்டவர்களும் உரிய படிவங்களை உதவி அரசாங்க அதிபரிடமிருந்து பெற்று பூரணப்படுத்தி 02 - 09 - 1987 க்கு முன்னர் மீள ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

01-01-1983 தொடக்கம் 30-09-1986 வரையிலான காலப்பகுதியில் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றிய விபரங்களை முன்னா கொடுத்தவர்கள் தருபவும் கொடுக்கத் தேவையில்லை

வை. மு. பஞ்சலிங்கம்.
மாவட்டச் செயலாளரும்,
அரசாங்க அதிபரும்,
யாழ். மாவட்டம்.

கச்சேரி,
யாழ்ப்பாணம்.
10 - 08 - 1987.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் பட்டது. வெளியிட்ட திகதி: 12-08-1987

Printed and Published by New Uthavan Publications (Pvt) Ltd. at 292/2 Navalar Road, Jaffna on Wednesday August 12 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org